21st August 1961]

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தியா சர்க்கார் "எண்ணெ வித்துக்கள்" என்ன என்ன என்று குறிப்பிட்டு ஒரு சர்க்குலர் அனுப்பினார்கள் அதைப் படிக்கிறேன். "Coconut has to be understood to mean coconut—fresh or dried, shelled or unshelled including copra, but excluding tender coconuts." ஆகையால் இளநீர்களைத் தவிர மற்றது எல்லாம் எண்ணெ வித்துக்கள் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.* **An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II. POINT OF ORDER *re* PUTTING SUPPLEMENTARY QUESTIONS.

SRI S. M. ANNAMALAI : On a point of order, Sir. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உபகேள்வி கேட்க உரிமை இருக்கிறது. அதனாலேயே நாங்கள் உபகேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறோம். என்னுடைய மெயின் கேள்வியே சரியான முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படாததால்—அது வேறுவிதமாக மாற்றி அமைக்கவும் பட்டிருப்பதால் அதைப் பற்றி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் வேறு எந்த வகையில் அதைப்பற்றி நான் எழுப்ப முடியும் என்று கேட்கிறேன்.

DEPUTY SPEAKER : While the hon. Members have got a right to put supplementary questions, the Chair has got the right to allow or disallow a supplementary question.

III. PERSONAL EXPLANATION UNDER QUESTION NO. 1290.

THE HON. SRI V. RAMAIAH : On a point or personal Explanation Sir ; திரு. என். ஆர். தியாகராஜன் போட்ட மூலக் கேள்விக்கு (கேள்வி—1290) கனம் மூக்கைய தேவா அவர்கள் உபகேள்வி போடும் போது மதுரை ஜில்லாவில் நான் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அந்தப் பிராந்திய விவசாயிகளுக்கு கம்பளிப் பூச்சியினால் உண்டாகிற துன்பங்களை நீக்கப் பல வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு அதை அப்படியே விட்டு விட்டதுபோலப் பேசினார்கள். அதைப்பற்றி அவர்கள் சரியான முறையில் தெரிந்து கொள்ளாது, தெரிந்துக்கொள்ள முயற்சி செய்யாது ஏதோ பிரசார ரீதியில் பேசுவது சரியல்ல. பத்திரிகையில் வந்த செய்தியைப்படித்துவிட்டு அதுபோல் அமைச்சர் அவர்கள் செய்வது சரியா என்று கேட்டார்கள்.

கனம் அங்கத்தினர் மூக்கைய தேவர் அவர்களுக்கு அப்படி பத்திரிகையில் வந்த செய்தி தவறு, என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்கப் பட்டிருக்கின்றன என்று என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். நடந்தது என்ன என்று பார்க்கலாம். மதுரைக்கு நான் போய் இருக்கக் கூடிய நேரத்தில் ஒரு பத்திரிகைச் செய்தியை "உசிலம்பட்டியில் கம்பளிப் பூச்சித் தொந்தரவினால் ரயில் ஓடுவது நின்று விட்டது" என்பதைப் பார்த்தேன். அதைப் பார்த்தவுடன் ஏற்பட்ட வேதனை காரணமாக மற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் விட்டுவிட்டு உடனே அந்த இடத்திற்குச் சென்று கிட்டத்தட்ட இருபது இருபத்திரண்டு கிராமங்களுக்குச் சென்று பார்த்தேன். ஏதோ ஒரு கிராமத்தில் இருந்து விவசாயிகளுடன் பேசி அவர்களுக்கு ஏதோ வாக்குறுதி கொடுத்துக்கொண்டிருக்கவில்லை. நின்று பேசக் கூட அப்போது நேரமில்லை. ஆனால் நான் செய்தது என்ன ? கம்பளிப் பூச்சியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களையும், அங்குள்ள கஷ்ட நிலையையும் கண்டவுடன் உடனே அரசாங்கத்திற்கு தெரிவித்துத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நினைத்தேன். அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினேன். அதுபற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படியாகவும் சொல்லிவிட்டு வந்தேன். அவர்கள் அன்று முதல் அங்குள்ள